புலவர் கா. கோவிந்தன் : பெரிய மாவட்டமாக இருந்தும், அங்கே போதிய ரயில் பாதை இல்லை என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா? அப்படி உணர்ந்து இந்தத் திட்டத்தை வற்புறுத்துவதற்கு அரசாங்கம் நினைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : ஒவ்வொரு மாவட்டத்தின் நிலையையும் நன்றாகப் பரிசீலனை செய்துதான் மத்திய அரசாங்கத்திற்குச் சில திட்டங்களை நமது அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்களது பதிலிலிருந்து நான் அறிய விரும்புவது என்னவென்றால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எடுத்துக்கொள்ளப் பட வேண்டும் என்று எந்தெந்தப் பாதைகள் சிபார்சு செய்யப் பட்டன? அவற்றில் ரயில்வே இலாகா எந்த எந்தப் பாதைகளை ஒப்புக்கொண்டார்கள், எதை எதை நிராகரித்தார்கள்?

THE HON. SRI V. RAMAIAH : The following lines were arranged to be taken up in the Third Five-Year Plan in the order of priority :—

1. Virudhunagar-Aruppukottai-Mudukalathur-Kilakarai line.
2. Salem-Bangalore line.
3. Manamadurai-Tuticorin line.
4. Tirunelveli-Cape Comorin line.
5. Chinnasalem-Chingleput line.
6. Theni-Gudalur line.
7. Salem-Tiruchirappalli via Karur line.

அவர்கள் இப்பொழுது நடைமுறையில் வேலைக்கு எடுத்துக் கொண்டிருப்பது—

1. Salem-Bangalore line.
2. Virudhunagar-Aruppukottai-Mudukalathur-Kilakarai line.
3. Manamadurai-Tuticorin line.

* 866 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have recommended to the Central Government the formation of a rail line between Tirunelveli and Nagercoil.

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : திருநெல்வேலிக்குத் தெற்கே இருக்கிற எல்லா மக்களும் பல காலமாக வேண்டிக் கொண்டிருக்கிற முக்கியமான ஒரு லைன் இது. ஆகையினாலே திருநெல்வேலிக்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலே போடப்படவேண்டிய இந்த ரயில்வே லைன் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்துவதற்கு, 'டாப் பிரையாரிடி' கொடுக்க நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா?

29th October 1962]

கனம் திரு. வெ. ராமையா : மத்திய அரசாங்கத்திற்கு அதைப் போலச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

நீலகிரி மாவட்டம்

* 867 கேள்வி.—**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தைப்பற்றி இதர மாநில மக்கள் தெரிந்துகொள்ள என்னென்ன விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன ?

(இ) சினிமாப் படம் மூலம் விளம்பரம் செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : (அ) நீலகிரி மாவட்டத்தைப் பற்றி, நூல்கள் வாயிலாகவும், பத்திரிகை விளம்பரங்கள் மூலமாகவும், மற்றும் புகைப்படங்கள் மூலமாகவும் தக்க முறையில் பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) இல்லை ஐயா.

திரு. ஜே. மாதா கவுடர் : வேறு மாநிலங்களிலுள்ள முக்கியமான இடங்களைப்பற்றி சினிமாப் படங்கள் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள நீலகிரி போன்ற முக்கியமான இடங்களைச் சினிமாப் படங்கள் மூலம் வேறு மாநிலங்கள் அறிந்துகொள்ளுவதற்கு ஏதுவாக, ஏன் சினிமாப் படங்கள் எடுக்கக் கூடாது.

கனம் திரு. ஜி. பூவராகன் : மத்திய அரசாங்கத்தினலே 'ஹாலிடே இன் சவுத் இந்தியா' என்ற ஒரு படம் பல மாநிலங்களிலே காட்டப்படுகிறது. வெளி நாடுகளிலேகூட சில சந்தர்ப்பங்களிலே காட்டப்படுகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சமீபத்திலே உதகையிலே நடந்த அகில-இந்திய டூரிஸ்டு டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டம் படம் எடுக்கப்பட்டுள்ளதா ? அப்படியானல் அதைக் காட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : அது சம்பந்தமாகப் படம் எடுக்கவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அமைச்சர் அவர்கள் சொன்னது குந்தாத் திட்டத்தைப் பற்றி. தென் இந்தியாவிலே முக்கியமானதாக இருக்கக் கூடிய குந்தாத் திட்டத்தை இரண்டு நிமிட நேரம் படத்தில் பார்த்தேன். ஆனல் நமது மாநில சர்க்கார் நீலகிரி ஜில்லாவைத் தனிப்பட்ட முறையிலே தனியாகப் படம் எடுத்து, வெளி மாநிலங்களில் காண்பிப்பதற்கு யோசிக்குமா என்பதை யாவது அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஜி. பூவராகன் : அதைப் பற்றி யோசிக்கலாம்.